## தென்னையில் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்:

- விளக்குபொறியை ஏக்கருக்கு 2 வீதம் இரவில் 7 மணி முதல் 11 மணி வரை வைத்து வெள்ளை ஈக்களை கண்காணித்தும் கவர்ந்தும் அழிக்கலாம்.
- மஞ்சள் நிற ஒட்டும் பொறிகள் ஏக்கருக்கு 10 வீதம் 6 அடி உயரத்தில் தொங்கவிட்டு (அ) மரத்தின் தண்டுபகுதியைச் சுற்றி கட்டி ஈக்களின் நடமாட்டத்தை கண்காணித்தும் கவர்ந்தும் அழிக்கலாம்.
- விசைத் தெளிப்பானைக் கொண்டு மிகவேகமாக தண்ணீரை பீச்சி தெளிப்பதன் மூலமாகவும் ஈக்களின் எண்ணிக்கை பெருகுவதை குறைக்கலாம்.
- என்கார்சியா ஒட்டுண்ணி குளவியை ஏக்கருக்கு 10 இலை துண்டுகள் வீதம் தாக்கப்பட்ட ஓலைகளின் மீது வைத்தும் கட்டுப்படுத்தலாம்.
- கண்ணாடி இறக்கை பூச்சி இரைவிழுங்கி முட்டைகளை ஏக்கருக்கு 400 வீதம் தாக்கப்பட்ட மரங்களில் வைத்தும் கட்டுப்படுத்தலாம்.
- கரும்பூசணத்தை கட்டுப்படுத்த மைதா மாவு பசை கரைசலை ஒரு லிட்டர் தண்ணீரில் 25 கிராம் வீதம் கலந்து தெளிக்கலாம்.
- இரசாயன பூச்சிக்கொல்லிகள் இயற்கை எதிர் உயிர் பூச்சிகளை அழித்து விடுவதால் அவற்றை அறவே பயன்படுத்தவே கூடாது.